2006 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கல் நாட்டப்பட்ட இடங்களுக்கெல்லாம் புதிதாக துணை மின் நிலையங்கள் அமைப்பது என்று சொன்னால், ஓராயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். எனவே, எங்கெங்கே துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறதோ, அதை எண்ணிப் பார்த்து, மின்சார வாரியம் நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தப் பகுதிக்குத் தேவைப்பட்டால், ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

143—

P.V.C. குழாய்

*** 435—திரு. இரா. இராம்பிரபு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நரிப்பையூர், உப்பு நீரை நன்னீராக்கும் திட்டத்தின்மூலம், சுத்தமான குடிநீர் வழங்க, இரும்புக் குழாய்களுக்குப் பதிலாக P.V.C. குழாய்களை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நரிப்பையூர், உப்புநீரை நன்னீராக்கும் திட்டத்தின்கீழ், இரும்புக் குழாய்களுக்குப் பதிலாக P.V.C. குழாய்கள் மாற்றுவதற்கான புனரமைப்புப் பணியை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம் பிரபு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

[2006 செப்டம்பர் 2

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுகாப்பான குடிநீரை வழங்குவதிலே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், பல ஆய்வுகள் நடத்தி வரலாறு படைத்து வருகிறார். இந்த நேரத்திலே பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் அதிகம் இருக்கிறது. பொதுவாக, bottle-களிலும், pocket-களிலும் விற்கப்படும் நீரை மக்கள் விரும்பி வருகிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட bottle-களில் அடைக்கப்பட்ட நீர், அதேபோல pocket-களில் அடைக்கப்பட்ட நீர், சுத்திகரிக்கப்பட்டதாக, போலியாக நிறைய உலா வந்து கொண்டிருக்கின்றன. இது மக்களிடையே அதிகமாகப் புழக்கத்தில் இருக்கின்றது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்வருமா; உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அத்தகைய நிறுவனங்களைக் களை எடுப்பாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமன் அவர்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. கடந்த காலத்திலே கேட்பவர்களுக்கு எல்லாம் அந்த உரிமையைத் தந்திருக்கக்கூடிய காரணத்தால்தான், இந்தப் பிரச்சினை உருவாகியிருக்கிறது. எனவே, இப்பொழுது அதைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலே அது முறையாக பரிசீலிக்கப்பட்டு அவர்கள் முறையாக நடத்துவார்களா என்பதை ஆய்வு செய்து, அதுமட்டுமல்ல; அந்த உரிமம் வழங்கப்பட்டதற்கு பிறகு, அதை அவ்வப்போது பரிசோதனை செய்யக்கூடிய நிலையையும் உருவாக்கக்கூடிய வகையிலே, திட்டங்கள் இந்த அரசின்மூலமாக உருவாக்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல்.

திரு. கே. முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிப்பையூரில் உப்பு நீரை நன்னீராக்கி, நல்ல குடிநீரை வழங்க ஆவன செய்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்ட மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத்

2006 செப்டம்பர் 2]

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்ட மதிப்பீடு எவ்வளவு; பணி எப்போது நிறைவடையும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். திரு. ஜெயக்குமார், கேள்வி நேரத்தில் இதுமாதிரி தலையிடக் கூடாது. உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) No; தலையீடு, கேள்வி நேரத்தில் இருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வாரியம் 18–7–2002-ல் ஒப்புதல் வழங்கியிருக்கிறது. எனவே, இந்த நிதியாண்டில் இப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் P.V.C. குழாய்கள் பதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

144—

நியாயவிலைக் கடை

* 1598—**திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், புளியம்பட்டி கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடையை இரண்டாகப் பிரித்துச் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அமலில் உள்ள அரசாணைகளின்படி, பகுதிநேர நியாயவிலைக் கடை துவங்குவதானால், தாய்க்கடை மற்றும் உத்தேச பகுதிநேரக் கடை ஆகியவை 2 கி.மீ. தூரத்திற்கு அப்பால் இருக்க வேண்டும். இந்த நியாயவிலைக் கடைகளுக்கு இடையே உள்ள குறைந்த தூரம் 2 கி.மீ. இருக்க வேண்டும். ஆனால், புளியம்பட்டி நியாயவிலைக் கடையில் இணைக்கப்பட்ட 8 பகுதிகளும்–புளியம்பட்டி, வேதகாரமேட்டுப்பட்டி,